| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அறிவழகன், த/பெ ராமசாமி | அ.வ.எண்.24/2016 | 04.08.2026 |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.10 | 01.10.2004 | பட்டு பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் | அசல் |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள நபர்கள் யார் என்றால் எனது அம்மாவை மட்டும் எனக்கு தெரியும், உடனிருப்பவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது மாமா பன்னீருக்கு 2 மகள்கள், ஒருவர் பெயர் அம்பிகா, மற்றொருவர் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி அம்பிகாவிற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. அதற்கு எனக்கு பத்திரிக்கை வைத்தார்கள். அந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஆங்கரை சரோஜா மண்டபத்திற்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கை மேற்படி திருமண பத்திரிக்கையா என்றால் இல்லை.
2. முதல் நாள் நடந்த திருமணத்திற்கு எனது வீட்டிலிருந்து யார் சென்றார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அம்மா மேற்படி திருமணத்திற்கு சென்றிருந்தார் என்றாலும், என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது அம்மாவுடன் இருக்கும் நபர் மேற்படி அம்பிகா தான் என்றாலும் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் முதல் பக்கத்தில் பின்புறம் உள்ள முகவரியும், அ.வ.எண்.152/2006–ல் வா.சா.ஆ.4 ஆவணமான

முருகேசன் என்பவரின் குடும்ப அட்டையில் உள்ள முகவரியும் ஒன்று தான் என்றால் சரிதான். கந்தர் என்பவர் வீட்டில் தான் வாதி முருகேசன் தற்போது வரை குடியிருந்து வருகிறார். அ.வ.எண்.52/2006 மற்றும் அ.வ.எண்.24/2016 ன் வழக்குரையில் வாதி முருகேசனின் முகவரி 1/117, புதிய கதவு எண்.1/147 கீழத்தெரு, திருமங்கலம் என கண்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது தவறாகும். மேற்படி விவரம் தவறு என்று நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. எனது தாத்தாவின் இறுதி சடங்கு திருமங்கலத்தில் தான் நடந்தது. அவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எனது தாத்தா கேட்டதற்கு இணங்க நான் எனது அம்மா ஆகியோர் எனது தாத்தாவை திருமங்கலத்திற்கு அழைத்து வந்துவிட்டோம். திருமங்கலத்தில் பட்டையதாரர்கள் உள்ளார்கள். மேற்படி பட்டையதாரர்களில் ஒருவரை விசாரணை செய்தால் எனது தாத்தாவிற்கு ஈம காரியங்களை யார் செய்தார்கள் என்று தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்கண்ட விவரங்களை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. மருதைமுத்து 1995ம் ஆண்டு முதல் இலால்குடி நீதிமன்றத்தின் வக்கில் குமாஸ்தாவாக இருந்து வருகிறார். நானும் 25 வருடங்களுக்கு மேலாக வழக்கறிஞராக தொழில் செய்துவருகிறேன். வாதிகளுக்கு ஆதரவாக வழக்கிற்கு பின்னிட்டு வழங்கப்பட்ட பட்டாவிற்கு எதிராக நான் வருவாய் துறையில் மேல்முறையீடு

செய்தேனா என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் வருவாய் துறை அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி ஆகியவை நாளது தேதிவரை எனது தாத்தா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்ய மறுத்துவிட்டார்கள். தைலானின் வாரிசான முருகேசனுக்கு தைலானின் பங்கில் ஒரு பங்கு கிடைக்கத்தக்கது என்றாலும், தைலான் எனது அம்மாவிற்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**Signed,**
அறிவழகன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.